Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure )
**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**
**CC.No. 5 / 2013**
**PW. 3 / LW. 5**
**Police Station: Mandharakuppam P.S**

**Deposition of witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | எழில்நிலவன் | **தொழில்** | இல்லை |
| **கணவர் பெயர்** | ராஜவேல் | **வசிப்பிடம்** | சின்னகாப்பாங்குளம் |
| **வயது** | 40 | **தாலுக்கா** | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 01.08.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(எதிரி அறிவழகன் ஆஜரில்லை, அவர் அடையாளம் மறுக்கப்படாது என்று குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை</u>:**

இறந்துபோன மின்னல்கொடி எனது மாமாவின் மனைவி என்றால் சரிதான். நான் ஏற்கனவே எனது முதல் விசாரணையில் மேற்படி மின்னல்கொடி இரு சக்கர வாகனத்தில் போகும்போது அடிப்பட்டு இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தகவல் கிடைத்துதான் சென்றுபார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இறந்துபோனவர் எனது மாமாவின் மனைவி என்பதால் நான் அவருக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure )

**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**
**CC.No. 5 / 2013**
**PW. 4 / LW.6**
**Police Station: Mandharakuppam P.S**

**Deposition of witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுகுமார் | **தொழில்** | என்எல்சி சொசைட்டி |
| **தந்தை பெயர்** | ரெங்கநாதன் | **வசிப்பிடம்** | சின்னகாப்பாங்குளம் |
| **வயது** | 43 | **தாலுக்கா** | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 01.08.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(எதிரி அறிவழகன் ஆஜரில்லை, அவர் அடையாளம் மறுக்கப்படாது என்று குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை:</u>**

இறந்துபோன மின்னல்கொடி எனது அக்கா என்றால் சரிதான். நான் ஏற்கனவே எனது முதல் விசாரணையில் சம்பவம் நடந்தபோது மருத்துவமனைக்கு முன்பு நான் இருந்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சாலையானது எவ்வாறு அமைந்திருந்தது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இருந்தது. நான் மருத்துவமனைக்கு முன்பு எந்த திசையில் இருந்தேன் என்றால் சாலைக்கு வடக்கு திசையில் டீ கடையிடம் இருந்தேன். அந்த சமயத்தில் பேருந்து ஒன்று வந்தது என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பேருந்து எந்த திசையில் வந்தது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது. அது எந்த பேருந்து என்றால் KPN பேருந்து ஆகும். அந்த சங்கதியை போலீசார் விசாரித்தபோதும் என்னுடைய முதல் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். பேருந்து விபத்து ஏற்படுத்திய பின்பு சென்றுவிட்டதா என்றால் இல்லை, சம்பவ இடத்தில் நின்றுவிட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண்

எனக்கு தெரியுமா என்றால் நான் அதை பார்க்கவில்லை. வாகனத்தின் எண் எனக்கு தெரியாது என்ற சங்கதியை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்கறால் கூறியுள்ளேன். விபத்து மருத்துவமனையின் வாயிலில்தான் நடந்ததா என்றால் ஆமாம். இறந்துபோனவர் எனது அக்கா என்பதால் நான் அவருக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.